بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

November 22
2013

**தமிழாக்கம் : மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்**

## ஈமானிலும் தொழுகையிலும் நிலைத்திருத்தல்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூல்களிலும், எழுத்துக்களிலும், கட்டளைகளிலும் நமக்கு தங்களது வருகையின் நோக்கத்தைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததாக வாதம் செய்கின்றோம். எனவே நாம் இந்த நோக்கத்தை, இன்னும் சொல்வதென்றால், இந்த நோக்கங்களை எப்போதும் நம் கண் முன்னால் வைக்க வேண்டும். இதன் மூலம் அவர்களது ஜமாஅத்தில் இணைந்ததற்கான உரிமையைச் செலுத்துபவர்களில் ஒருவராக நாம் ஆக வேண்டும். இந்த நோக்கங்களில் சிலவற்றை இப்போது நான் எடுத்துக் கூறுவேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் இந்தக் காலத்தில் மீண்டும் ஈமானை உயிர்ப்பிப்பதற்காக என்னை அனுப்பியுள்ளான். மேலும் நிச்சய உறுதிக்கான ஆற்றலைப் பெறுவதில் மக்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக என்னை அனுப்பியுள்ளான். இறைவன் இருக்கின்றான்; அவன் துஆக்களைக் கேட்கின்றான். நன்மைகளுக்கான நற்கூலியை வழங்குகின்றான். தீமைகளுக்கு தண்டனை வழங்குகின்றான் என்பதில் இம்மக்களுக்கு உறுதி ஏற்பட வேண்டும்.

**இதற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:**

ஈமான் முழுமை அடையாத வரை மனிதன் நற்செயல்களை முழுமையான முறையில் செய்ய முடியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்த அளவு பலவீனமான அம்சங்கள் இருக்குமோ அந்த அளவு நற்செயல்களில் குறைவு ஏற்படும்.

எனவே அல்லாஹ்வின் மீது முழுமையான ஈமானையும் உறுதியையும் ஏற்படுத்துவதற்காகவே நபிமார்கள் வருகின்றனர்.

இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகைக்கான மிகப்பெரும் நோக்கமாகும். அதன் மூலமாக பலவீனங்கள் அகன்று ஈமான் முழுமையடைய வேண்டும்.

இதுவே அவர்களது சில கட்டளைகளின் சுருக்கமான கருத்தாகும். அவர்களது சொற்களை முழுமையாக கூறாமல் அதன் சுருக்கமான கருத்தை எனது சொற்களில் கூறியுள்ளேன்.

எவ்வாறிருப்பினும் இந்த பலவீனங்கள் எவ்வாறு அகலும்? ஈமான் எவ்வாறு முழுமை பெறும்? இது தொடர்பாக அவர்கள் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். அதாவது என்னிடம் பைஅத் செய்து விட்டதால் மட்டும் இது நடந்து விடாது என்று அவர்கள் கூறுகின்றார்கள். மாறாக, இதற்காக முயற்சிகள் செய்ய வேண்டியது அவசியமானதாகும். இந்த வழிமுறையைத் தான் அல்லாஹ்வும் கூறியுள்ளான்.

وَالَّذِينَ جَاهَدُوا فِينَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

*அதாவது எவர்கள் நம்மவர்களாக இருந்து முயற்சி செய்கின்றார்களோ அவர்களுக்காக நாம் நமது வழிகளைத் திறந்து தருகின்றோம். (29:70)*

எனவே, இதுதான் ஈமான் முழுமை பெறுவதற்குரிய வழியாகும். பைஅத் செய்வதால் மட்டும் சீர்திருத்தம் ஏற்படாது. இத்துடன் உங்களது நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்த மேலும் முயற்சி செய்யப்படாமல் இருந்தால், முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காக இந்த முயற்சி செய்யப்படவில்லை என்றால், தமது உள்ளங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவது, செயல்படுவது அதற்காக முயற்சி செய்வது ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்தப்படவில்லை என்றால் எந்தப் பயனும் ஏற்படாது.

**பிறிதோரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உலகில் ஒவ்வொரு பொருளின் முன்னேற்றமும் படிப்படியாகவே நிகழ்கிறது. ஆன்மீக முன்னேற்றமும் இப்படித்தான் ஏற்படுகின்றது. அதாவது முயற்சி இல்லாமல் எதுவும் செய்ய முடியாது. முயற்சியும் கூட இறைவனோடு ஒன்றியவாறு இருக்க வேண்டும். தூய்மையான உள்ளத்துடன் அவனைத் தேட வேண்டும். அவனது போதனைகளுக்கேற்ப செயல்பட வேண்டும். திருக்குர்ஆனுக்கு மாற்றமாக தவம் இருப்பவர்கள் கூறுவது போன்று தாமே சில பயிற்சிகளையும் முயற்சிகளையும் உருவாக்கக் கூடாது. இதற்காகவே இறைவன் என்னை அனுப்பியுள்ளான். அதன் மூலம் எவ்வாறு மனிதன் இறைவன் வரை சென்றடைய முடியும் என்பதை நான் உலகிற்கு காட்ட வேண்டும்.

அவர்கள் நமக்கு என்ன காட்டினார்கள்? நம்மிடம் அவர்களுக்கு என்ன எதிர்பார்ப்பு இருக்கின்றது? அவர்கள் தமது எஜமானரான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் இறைவணக்கம் மற்றும் அழகிய நல்லொழுக்கம் தொடர்பாக நிலைநாட்டியிருந்த அந்த உயர்வான முன்மாதிரியைப் பின்பற்றிச் செயல்படுமாறு போதனை செய்தார்கள். அவற்றை நிலைபெறச் செய்வதற்காக நபித்தோழர்களும் முயற்சி செய்தனர். அதன் மூலம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவர்கள் என்று அவர்கள் அழைக்கப்பட்டனர். இதன் விளைவாக அவர்கள் அல்லாஹ்வின் அருள்களுக்கு எவ்வாறு வாரிசாகியுள்ளனர் என்றால் ஒரு உலகையே அவர்கள் தங்களுக்குப் பின்னால் வரவழைத்தனர்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தகைய மனிதராக ஆக வேண்டிய தேவை இருக்கின்றது என்பதை விளக்கியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

கிளியைப் போன்று சில சொற்களை பைஅத்தின் போது மீண்டும் மீண்டும் கூறுவதை மட்டும் நான் விரும்புவதில்லை. இதனால் எந்தப் பலனும் ஏற்படாது. நஃப்ஸை தூய்மைப்படுத்துவதற்கான அறிவைப் பெறுங்கள். இதற்கான தேவை தான் இருக்கின்றது. நமது பணியும் நமது நோக்கமும் நீங்கள் உங்களிடத்தில் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதேயாகும். உங்களிடத்தில் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்துங்கள். முற்றிலும் ஒரு புதிய மனிதராக ஆகி விடுங்கள். எனவே உங்களில் ஒவ்வொருவரும் இந்த இரகசியத்தைப் புரிவது அவசியமானதாகும். மேலும் நான் வேறு ஒரு நபராவேன் என்று கூறும் வகையிலுள்ள மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

எனவே நாம் நம்மிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்தவாறு நம்மை முற்றிலும் வேறு ஒரு நபராக ஆக்காத வரையில், உலகிலுள்ளவர்களை விட வேறுபட்டு நிற்கும் வகையில் நம்மை உருவாக்கிக் கொள்ளாத வரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கட்டளைக்கேற்ப நமது பைஅத்தால் எந்தப் பலனும் ஏற்படாது.

பிறிதோரிடத்தில் தனது வருகையின் நோக்கத்தை எடுத்துக் கூறியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த எளியவன் இந்த தூதுச் செய்தியை அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு எட்ட வைக்க வேண்டும் என்ற இந்த நோக்கத்திற்காகவே அனுப்பப்பட்டுள்ளேன். அதாவது தற்போது இருக்கின்ற எல்லா மதங்களிலும் உண்மையானதும், இறைவனின் விருப்பத்திற்கேற்பவும் இருப்பது திருக்குர்ஆன் கொண்டு வந்துள்ள மார்க்கமேயாகும். இரட்சிப்பின் வீட்டில் நுழைவதற்கான வாசல் *லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதர் ரஸூலுல்லாஹ்* ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நம்முடைய உண்மையான விருப்பமும் நாட்டமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கம்பீரத்தை வெளிப்படுத்துவதாகும். மேலும் அவர்களது மகத்துவத்தை நிலைநாட்டுவதாகும். நம்மைப் பற்றி குறிப்பிடுவது இதனோடு தொடர்புடையது மட்டுமேயாகும். அதாவது நம்மை எவராவது புகழ்வதாக இருந்தாலும் அதுவும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைத் தொடர்புபடுத்தியே ஆகும்.

எனவே இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நாம் பைஅத் செய்துள்ளோம். அதனை நிறைவேற்ற நாம் திருக்குர்ஆனின் போதனைகளைப் பெற வேண்டிய தேவை இருக்கின்றது. அதன் மூலம் அந்த போதனைகளுக்கு ஏற்ப செயல்படுவதுடன் அவற்றைப் பரப்பவும் வேண்டும். ஏனென்றால் உலகின் இரகசியம் *லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்* –வில் தான் இருக்கின்றது.

எனவே உலகிற்கு இதனை எடுத்துக் கூறுங்கள். அதாவது இந்த *லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்* என்ற கொடியின் கீழ் வந்து நீங்களும் இரட்சிப்பைப் பெறுங்கள் என்று கூறுங்கள்.

**பிறகு அவர்கள் ஓரிடத்தில் தமது வருகையின் நோக்கத்தை எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்:**

இப்போது இறைவன் இஸ்லாத்தை எல்லா சமுதாயங்களின் மீதும் வெற்றி பெறச் செய்ய நாடியுள்ளான். இந்த நோக்கத்திற்காகவே அவன் என்னை அனுப்பியுள்ளான். இதற்கு முன்னர் இறைவனால் அனுப்பப்பட்டவர்கள் வந்தது போன்றே அவன் என்னை அனுப்பியுள்ளான்.

**பிறகு தனது வருகையின் நோக்கத்தை விளக்கியவாறு அவர்கள் கூறுகின்றார்கள்:**

இஸ்லாத்தை தெளிவான அத்தாட்சிகள் மற்றும் ஒளிமயமான அடையாளங்கள் ஆகியவற்றின் மூலமாக எல்லா சமுதாயங்கள் மீதும் வெற்றி பெறச் செய்யவே இறைவன் என்னை அனுப்பியுள்ளான்.

**பிறகு அவர்கள் தமது வருகையின் நோக்கம் பற்றி ஓரிடத்தில் இவ்வாறும் கூறியுள்ளார்கள்:**

நான் இறைவன் மீதுள்ள ஈமானை உருவாக்க விரும்புகின்றேன். எவர் இறைவன் மீது ஈமான் கொள்கின்றாரோ அவர் பாவத்தின் விசத்திலிருந்து தப்பிக்க வேண்டும். அவரது இயல்பில் ஒரு மாற்றம் உருவாக வேண்டும். அவர் மரணித்து ஒரு புதிய வாழ்க்கை அவருக்கு கிடைக்க வேண்டும். பாவம் செய்வதில் இன்பம் ஏற்படுவதற்குப் பதிலாக அவரது உள்ளத்தில் அதன் மீது வெறுப்பு ஏற்பட வேண்டும். எவரது நிலை இவ்வாறு ஆகிவிடுமோ அவர் இறைவனை நான் அடையாளங்கண்டு கொண்டேன் என்று கூற முடியும். இறைவனுக்கு நன்றாகத் தெரியும். இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட நிலைமை தான் ஏற்பட்டுள்ளது. இறைவனைப் பற்றிய ஞானம் இல்லாமல் ஆகி விட்டது. இந்த இலக்கு வரை மனிதனைக் கொண்டு செல்கின்ற, இந்த இயல்பை அவனிடம் ஏற்படுத்துகின்ற எந்த மதமும் இல்லை. நாம் எந்தவொரு குறிப்பிட்ட மதத்தின் நிலையில் எவ்வகையிலும் வேதனை அடைய முடியாது. இந்த துன்பம் பொதுவானதாக ஆகிக் கொண்டிருக்கின்றது. இந்த நோய் அபாயகரமான நிலையில் பரவி விட்டது.

நான் உண்மையாகவே கூறுகின்றேன். இறைவன் மீது ஈமான் கொள்வதன் மூலம் மனிதன் மலக்காக ஆகி விடுகின்றான். மலக்குகள் கூட அவனுக்கு ஸஜ்தா செய்வர். அவன் ஒளிமயமானவனாக ஆகி விடுகின்றான். சுருக்கமாக, இதுபோன்ற காலகட்டம் உலகில் வரும்போது அதாவது இறைவனைப் பற்றிய ஞானம் எஞ்சியிருக்காமல் அழிவை ஏற்படுத்தக்கூடிய எல்லா விதமான தீய செயல்களும் பரவி விடும்போது இறைவனைப் பற்றிய அச்சம் இல்லாமல் இருக்கும்போது, இறைவனுக்குரிய உரிமைகள் இறையடியார்களுக்கு கொடுக்கப்படும் போது அத்தகைய நிலையில் அல்லாஹ் ஒரு மனிதருக்கு தனது ஞானம் பற்றிய ஒளியை வழங்கி அவரை தன்புறமிருந்து அனுப்பி வைக்கின்றான். இதனால், அவர் மீது சாபமிடப்படுகிறது. அவருக்கு தொல்லைகள் கொடுக்கப்படுகின்றது. அவருக்கு துன்பம் தரப்படுகிறது. பிறகு இறைவனால் அனுப்பப்பட்ட அவர் வெற்றி பெற்று விடுகின்றார். இவ்வாறே இக்காலத்தில் இறைவன் என்னை அனுப்பியுள்ளான். மேலும் தன்னைப் பற்றிய ஞானத்தின் ஒளியை எனக்கு வழங்கியுள்ளான்.

**பிறகு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நல்லொழுக்க ஆற்றல்களைச் சீர்படுத்துவதற்கான பயிற்சியை வழங்குமாறு எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம், உங்களது வாதம் மற்றும் தூதுத்துவத்தின் விளைவு எதுவாக இருக்கும்? அதாவது இதனால் உங்களது என்ன நோக்கங்கள் நிறைவேறும்? நீங்கள் ஏன் வந்துள்ளீர்கள்? என்று கேட்டார்.

அதற்கு அவர்கள், இறைவனோடு உள்ள தொடர்பு குறைந்து உலகத்தின் மீதுள்ள நேசம் மிகைத்து விட்டது. தூய்மை குறைந்து விட்டது. இறைவன், இறையடியாருக்கும் இறைவனுக்கும் இடையிலுள்ள அந்த உறவை மீண்டும் உறுதிப்படுத்துவான். தொலைந்துபோன தூய்மையை மீண்டும் கொண்டு வருவான். உலகத்தின் மீதுள்ள நேசம் குளிர்ந்து விடும். மேலும் இது என் மூலமாக நடைபெறும் என்று கூறினார்கள்.

இது மிகப்பெரும் நோக்கமாகும். அவர்களது இந்த வாதம் மிகப்பெரும் வாதமாகும். இதனை அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்கள். இன்றைய பௌதீக உலகில் நாம் பார்க்கின்றோம். உலகம் பௌதீகத்தில் மூழ்கி தன்னைப் படைத்தவனை மறந்து விட்டது. மார்க்கத்தை அல்லது இறைவன் இருக்கின்றான் என்பதை ஏற்றுக் கொள்பவர்களும் புரிந்திருப்பவர்களும் கூட வெளிப்படையாகத்தான் அவ்வாறு தோற்றமளிக்கின்றனர். அவர்களுக்கு இறைவனின் இருப்பைப் பற்றி கொஞ்சமும் உறுதியான நம்பிக்கை இல்லை. இதைப் பற்றிய அறிவும் ஞானமும் அவர்களுக்கு இல்லை. மார்க்கத்தைப் பற்றியும் அவர்களுக்கு எதுவும் தெரியாது. அவர்களுக்கு வேண்டிய அசல் பொருள் உலகமும் அதன் செல்வமும் வளமுமே ஆகும்.

வெறும் பெயரளவில் அவர்கள் ஏதாவதொரு மதத்தை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அத்தகைய நிலைமையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்த வாதம் நிச்சயமாக ஒரு மிகப்பெரும் வாதமாகும். ஆனால் அவர்களுக்கு அல்லாஹ்வின் மீது எந்த அளவு நம்பிக்கை இருந்தது? தனது நோக்கத்தை அடைவதில் அவர்களுக்கு எந்த அளவு நம்பிக்கை இருந்தது? இது நான் கூறிய அன்னாரது சொற்களிலுள்ள மகிமை மூலம் வெளிப்பட்டுள்ளது.

ஆனால் இந்த எல்லா சொற்களும், அவர்களது இந்த வாதமும், அவர்களது வருகைக்கான காரணமும் நோக்கங்களும் நமக்கும் சிலவற்றின் பக்கம் கவனமூட்டுகின்றது. இவற்றையெல்லாம் படித்து விட்டு, கேட்டு விட்டுதான் ஜமாஅத்தில் இணைந்துள்ளோம். அல்லது நமது மூதாதையர்கள் ஜமாஅத்தில் இணைந்தனர். நாம் அவர்களது இந்த நன்மைகளின் அருளைப் பெற்றுள்ளோம். இது நம்மிடம் சிலவற்றைக் கேட்கின்றது. அல்லது இந்த நோக்கங்கள் நம்மிடம் சிலவற்றைக் கேட்கின்றன. அது என்னவென்றால், நாம் இந்த நோக்கங்களை நமது வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். நாம் இவற்றை நமது வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்குவது அவசியமானதாகும். நாமும் இதன் விளைவுகளைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த விசயங்களை உலகில் ஏற்படுத்த வந்துள்ளார்களோ நாமும் அதை பெற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். நாமும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பிரச்சாரத்தை நிறைவு செய்வதற்கு உதவி செய்பவர்களாக இருக்க வேண்டும். நாம் அழைக்கின்ற ஒருவரது குரலைக் கேட்டு அவர் மீது ஈமான் கொண்டிருக்கின்றோம். எனவே நாம் இவ்வாறு அறிவிப்பு செய்கின்றோம். அவ்வாறு அறிவிப்பு செய்யவும் வேண்டும். அந்த அறிவிப்பு نَحْنُ أَنْصَارُ اللهِ *(3:53)* என்பதாகும். நாம் நமது நிலைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவோம். மேலும் இந்த தூதுச் செய்தியை பரப்பி விடுவோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த நோக்கத்திற்காக வந்தார்களோ அதனை நாம் நிறைவேற்ற முயற்சி செய்வோம்.

எனவே நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். சிந்திக்க வேண்டும். திட்டங்களைத் தீட்ட வேண்டும். அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டும். அதன் மூலமாக நாம் வெற்றிகளை பெற்று முன்னேறிச் செல்வோம். நாம் அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு நிம்மதியாக உட்கார்ந்து விட்டால், எவ்வித கவலையும் இல்லாமல் இருந்தால் இது பைஅத் உடன்படிக்கைக்குரிய உரிமையை செலுத்துகின்ற விசயமாக இருக்க முடியாது. இந்த வாதத்தை நாம் ஏற்றுக் கொண்டு நாம் வெறுமனே அமர்ந்து விடுவதும் தூங்கி விடுவதும் நம்மை குற்றவாளிகளாக ஆக்கி விடும். ஆனால் அத்துடன் நாம் நமது வசதிகளைப் பார்க்கும் போது, நமது நிலைமைகளைப் பார்க்கும் போது, என்ன? இவையெல்லாம் நடக்க முடியுமா? என்று நாம் சிந்திக்கின்றோம்.

மேலும் நாம் செய்வதாக இருந்தாலும் என்ன செய்வோம் என்று நினைக்கின்றோம். ஒருபுறம் நமது வசதிகள் ஒரு எல்லைக்கு உட்பட்டதாக இருக்கின்றது. மறுபுறம் உலகிலுள்ள 80 சதவிகித மக்களுக்கு மார்க்கத்தில் ஆர்வம் இல்லை. உலகின் பின்னால் ஓடுபவர்களாக இவர்கள் உள்ளனர். இந்த முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் செல்வம் இருக்கின்றது. எல்லா வகையான முன்னேற்றமும் இருக்கின்றது. மற்ற பௌதீக பொருள்களும் இருக்கின்றன. அவை இங்கு வசிப்பவர்களை இறைவனை விட்டு தொலைவில் கொண்டு சென்று விடுகின்றது. இவர்கள் எங்களுக்கு நேரமில்லை என்று கூறுகின்றனர். இறைவனைத் தேடுவதில் எங்களது நேரத்தை வீணாக்க விரும்பவில்லை என்கின்றனர்.

நேற்று தபாலில் ஜப்பானிலிருந்து ஒரு அஹ்மதியின் கடிதம் எனக்கு வந்திருந்தது. அதில் தனது பெரும் வேதனையை அவர் வெளிப்படுத்தி இருந்தார். அவர் எழுதுகின்றார்: மிக நல்ல உயர்வான ஒழுக்கமுடைய எனது ஜப்பானிய நண்பர் ஒருவர் இருக்கின்றார். அவரிடம் நான் பேசிக் கொண்டிருப்பேன். அவரிடம் நான் இறைவன் புறமிருந்து உங்களுக்கு வழிகாட்டல் கிடைப்பதற்காக நீங்கள் அவனிடம் துஆ செய்யுங்கள் என்று கூறியதும் உங்களுடைய

இறைவனைத் தேடி அலைவதற்கு என்னிடம் நேரமில்லை. அல்லது இறைவனிடம் வழிகாட்டலைக் கேட்பதற்கு என்னிடம் நேரமில்லை. வேறு பல பணிகள் எனக்கு இருக்கின்றது என்று கூறினார்.

ஆக, இதுதான் உலகின் நிலையாகும். தங்களை முன்னேற்றம் அடைந்துள்ளவர்களாகக் கருதுகின்ற இந்த சமுதாயங்களின் நிலை இவ்வாறானதாக உள்ளது. மேலும் ஏழ்மையிலுள்ள சமுதாயங்களையும் இந்த முன்னேற்றம் மற்றும் செல்வம் ஆகியவற்றின் ஆதிக்கத்தால் தங்களுக்கு பின்னால் வரவழைப்பதற்காக இந்த பெரும் சக்திகளும் செல்வந்தவர்கள் இருக்கும் சமுதாயங்களும் பெரும் முயற்சி செய்கின்றனர். இத்தகைய நிலைமை ஏற்பட்டு நாம் கூறுவதைக் கேட்பதன் பக்கம் கவனம் இல்லாமல் இருந்தால் அல்லது குறைந்தபட்சம் ஒரு பெரும் கூட்டத்தினர்க்கு இதன் பக்கம் கவனம் இல்லையென்றால், மேலும் செல்வமும் பௌதீகமும் ஒவ்வொருவரையும் தனது பிடியின் கீழ் கொண்டு வர முயற்சி செய்கின்றது என்றால், நான் ஏற்கனவே கூறியது போன்று நமது வசதிகளும் குறைவாக இருக்கும் போது, அத்தகைய தருணத்தில் நாம் எவ்வாறு பொய்யையும், பௌதீக ஆற்றலையும் எதிர்த்து நிற்க முடியும்? வெளிப்படையாக நாம் பார்க்கும் போது சாத்தியமற்ற ஒன்றாக இது தெரிகிறது. நாம் உலகிலுள்ள பெரும்பாலான மக்களுக்கு இறைவனை அடையாளம் காட்டுவதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகிமையை நிலைநாட்டுவதும் நடக்காத ஒன்றாகத் தெரிகிறது.

ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதைப் பற்றி கூறுகின்றார்கள். மிகவும் வலுவாக இதைப் பற்றி கூறுகின்றார்கள். அதாவது இவற்றையெல்லாம் செய்வதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். இது நடக்கும் என்று அவர்கள் கூறுகின்றார்கள். இன்சா அல்லாஹ்.

நாமும் அவர்களின் வாதத்தின் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்து இந்த அறிவிப்பை நாம் செய்கின்றோம். இந்த அறிவிப்பை நாம் வெளிப்படையாகச் செய்தாலும் செய்யாவிட்டாலும் நாம் அவர்களிடம் பைஅத் செய்திருப்பது நம்மை இந்த அறிவிப்பை செய்ய வைக்கிறது. அவ்வாறு நாம் அறிவிப்பு செய்யவும் வேண்டும். அந்த அறிவிப்பு نَحْنُ أَنْصَارُ اللّٰهِ அதாவது, ***நாங்கள் அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு உதவி செய்பவர்களாக இருக்கின்றோம் (3:53)*** என்ற அறிவிப்பாகும். இன்சா அல்லாஹ் உதவி செய்பவர்களாக நாம் இருப்போம். உலகம் மறுப்பதால் நாங்கள் அவநம்பிக்கை அடைய மாட்டோம். ஏனென்றால் நாம் உலகின் கண்களால் பார்த்தவாறு இந்தப் பணிகளை முன்னேற்றமடையச் செய்யவில்லை. மாறாக, அல்லாஹ்வின் உதவிகள் நமக்கு ஒவ்வொரு அடியை நாம் எடுத்து வைக்கும் போதும் ஆறுதலை வழங்குகின்றது. நீங்கள் அல்லாஹ்வுடன் ஒன்றிய நிலையில் முயற்சிகளைச் செய்தால் புதிய வழிகள் திறந்து கொண்டே இருக்கும்.

எனவே நாம் உலகின் பார்வையில் பார்த்து நமது வசதிகள் மீது நம்பிக்கை வைப்பதாக இருந்தால் நம்முடைய வெற்றி என்பது ஒரு பைத்தியக்காரனின் கற்பனையாகத்தான் தெரியும். உலகின் சக்தி மற்றும் வசதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் நாம் பார்ப்பதாக இருந்தால் ஒரு நாட்டைப் பார்த்து விட்டே நாம் மிகுந்த கவலைக்கு ஆளாகி விடுவோம். உதாரணமாக, ரஷ்யாவை எடுத்துக் கொள்ளுங்கள். சீனாவை எடுத்துக் கொள்ளுங்கள். ஐரோப்பாவின் எந்த நாட்டை வேண்டுமானலும் எடுத்துக் கொள்ளுங்கள். அமெரிக்காவின் எந்த நாட்டை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். தீவுகளை எடுத்துக் கொள்ளுங்கள். ஆப்பிரிக்காவின் ஏதாவதொரு நாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு இடத்திலும் பல்வேறு தடைகள் நமக்கு ஏற்படும். அது நாம் முன்னேறிச் செல்வதிலிருந்தும் நமக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக இருக்கும். நாடுகளின் நிலைமையும், உலகச் செல்வமும் வளமும் இன்றிலிருந்து சில வருடங்கள் முன்னரும் நமக்கு சாதகமாக இருந்ததில்லை. இன்றும் அவை நமக்கு சாதகமாக இல்லை. ஆனால் இது இறைவனின் பணிகளாகும். அல்லாஹ்வின் அருளால் அவை நடக்கும். நடந்து கொண்டிருக்கின்றன.

உதாரணமாக, ஒரு சமயத்தில் ரஷ்யாவிலும் அதோடு இணைந்திருந்த பிரதேசங்களிலும் கம்யூனிச அரசாங்கம் இருந்ததன் காரணமாக அங்கு தப்லீக் செய்ய முடியாமல் இருந்தது. அவர்களில் ஒரு பிரிவினர் சுதந்திரமாகச் செயல்பட்டு மார்க்கத்தை விட்டு தொலைவில் சென்று விட்டனர். மேலும் உலகத்தின் பொலிவு அவர்களை குருடர்களாக்கி விட்டது. மறுபுறம், எந்த முஸ்லிம் பிரதேசங்கள் ரஷ்யாவில் இணைந்திருந்ததோ அங்கு மார்க்கத் தீர்ப்பு வழங்குகின்ற முஃப்திகளும் சுயநலவாதிகளும், சுயநலமாக செயல்படுகின்ற மதத் தலைவர்களும் அரசாங்கத்தை எந்த அளவு அச்சுறுத்தியுள்ளனர் என்றால் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்திற்கு அது எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கு முன்னாலும் தடைகற்கள் போடப்படுகின்றது. ஜமாஅத்தின் மீது அடக்குமுறை இருக்கின்றது. அங்குள்ள அஹ்மதிகளையும் அச்சுறுத்தி அவர்களை மிரட்டுகின்றார்கள். காவலில் வைக்கின்றார்கள்.

மேற்கத்திய நாடுகளைப் பாருங்கள். இங்கும் உலகப்பற்று அளவு கடந்து இருக்கின்றது. அங்கு தரக்குறைவான வெட்கக்கேடான செயல்களுக்கு சட்டம் பாதுகாப்பை வழங்குகிறது. எந்த வெட்கக்கேடான செயலைச் செய்ததன் விளைவாக அல்லாஹ் ஒரு சமுதாயத்தை அழித்து விட்டானோ அந்த வெட்கக்கேடான செயலுக்கு அனுதாபத்துடன் நடந்து கொள்வது என்ற பெயரில் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. சீனாவில் உள்ளவர்களுக்கு மார்க்கத்துடன் எந்த ஆர்வமும் இல்லை. பௌதீக முன்னேற்றத்தைப் பெறுவதில் அவர்களது ஓட்டம் இருந்து வருகிறது. பொருளாதார ரீதியாகவும் அது உலகின் ஒரு மிகப்பெரும் சக்தியாக ஆகிக் கொண்டிருக்கின்றது. ஜப்பானும் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள நாடாகும். டெக்னாலஜியில் அது முன்னேறியுள்ளது. வியக்கத்தக்க அளவில் அதில் முன்னேற்றம் தெரிய வருகிறது. பெரும்பாலான மக்கள் உலகைப் பெற்றுக் கொள்வதற்காக அதன் பின்னால் சென்று கொண்டிருக்கின்றனர். ஆனால் மார்க்கத்தை விட்டும் அவர்கள் தொலைவில் இருக்கின்றனர்.

நான் இப்போது ஓர் உதாரணத்தைக் கூறினேன். இறைவனைத் தேட எனக்கு நேரமில்லை (நவூதுபில்லாஹ் – அல்லாஹ் காப்பானாக) என்று ஒருவர் கூறியுள்ளார். பெரும்பாலான மக்களது கருத்தும் இப்படித்தான் இருக்கின்றது. எத்தகைய இறைவன் அவன்? எந்த இறைவன்? என்றே அவர்கள் கேட்கின்றனர். ஒழுக்கத்தைப் பொருத்தவரையில் இவர்கள் மிகவும் முன்னேறியுள்ளனர். ஆனால் உலகவாதிகளாக இருப்பது இவர்களை மார்க்கத்தை விட்டும் தொலைவில் கொண்டு போய் விட்டது. ஜப்பானியர்களிடம் நீங்கள் கேட்டால் வெளிப்படையாகப் பார்க்கும் போது அவர்களின் மரபுப்படி அவர்களிடம் இருந்து வரும் மதம் Synthoism ஆகும். ஆனால் உண்மையில் Synthoism, கிறிஸ்தவம் மற்றும் புத்தமதம் ஆகியவற்றின் வியக்கத்தக்க ஒரு தொகுப்பாக இருக்கின்றது. செயலளவில் பார்க்கும் போது, ஒரு சடங்கு என்ற வகையில் பிறப்பது, வாழ்வது, பிறகு மரணித்த பிறகு பல்வேறு நிலைகளில் பல்வேறு வழிமுறைகளைக் கடைபிடிப்பது ஆகியவை உள்ளன. எவ்வாறிருப்பினும், மார்க்கத்துடன் அவர்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை.

மேற்கத்திய நாடுகளில் பெரும்பாலான மக்கள் இறைவனை மறந்து விட்டனர். இறைவனை மறந்து விட்டது மட்டுமல்லாமல் இறைவனை அவர்கள் எள்ளி நகையாடுகின்றனர். பரிகாசம் செய்கின்றனர். மார்க்கத்தை அவர்கள் ஒரு சுமையாகக் கருதுகின்றனர். ஆலயத்திற்குச் செல்கின்ற கிறிஸ்தவர் யாருமில்லை. நாங்கள் இதற்காக முயற்சி செய்கின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் ஆலயங்கள் விற்கப்படுகின்றன. இது உலகின் நிலையாகும். உலக அளவில் பார்க்கும் போது நமக்கு இருக்கின்ற வசதிகள் ஒன்றுமே இல்லாததற்குச் சமமாகும். இந்த உலகவாதிகளுக்கு முன்பு நமது வசதிகளுக்கு ஒரு அணு அளவு கூட தகுதியில்லை. இந்த எல்லா விசயங்களும் நமக்கு கவலையைத் தரக்கூடியதாக இருக்கின்றது. கவலை தரக்கூடியதாக அவை இருக்கவும் வேண்டும்.

இப்படிப்பட்ட நிலைகளைப் பார்க்கும் போது நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பிரச்சாரத்தை எப்படி முன்னேறும்படி செய்ய முடியும்? ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழு உலகிற்காகவும் அனுப்பியுள்ள அந்த இறைவன், இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடியாரை அனுப்பி வைத்துள்ள இறைவன் நம்மிடம், நம்மைச் சார்ந்தவராக இருந்து நமது வழிகளைத் தேடுங்கள் என்று கூறியுள்ளான். இறைவனுடன் ஒன்றியிருந்து அவனது வழிகளை நாம் எப்படி தேட முடியும்?

**இதுபற்றி அல்லாஹ் கூறுகின்றான்:**

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلَوٰةِ ۚ إِنَّ اللّٰهَ مَعَ الصَّابِرِينَ

*நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமையுடனும் துஆவுடனும் அல்லாஹ்வின் உதவியைக் கேளுங்கள். அல்லாஹ் நிச்சயமாக பொறுமையாளர்களுடன் இருக்கின்றான். (2:154)*

இத்தகைய அல்லாஹ்விடம் உதவி கோரப்படும்போது பெரும் பெரும் தடைகள் கூட காற்றில் பறந்து விடுகிறது. எல்லா வல்லமைகளையும் உடைய அல்லாஹ், தனது கம்பீரத்துடன் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருக்கின்ற அல்லாஹ் ஒன்றுமற்றதிலிருந்தும் ஒவ்வொரு பொருளையும் உருவாக்குகின்ற ஆற்றலை உடையவனாக இருக்கின்றான். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கியாமத் வரை ஒவ்வொரு காலத்திற்கும், ஒவ்வொரு சமுதாயத்திற்கும், ஒவ்வொரு மனிதனுக்கும் இரட்சிப்பை வழங்கக்கூடியவராக அனுப்பியுள்ளான். திருக்குர்ஆனை அன்னார் மீது இறக்கி வைத்து எல்லா மனிதர்களுக்காகவும் அவன் சரீஅத்தை நிறைவடையச் செய்து விட்டான். அந்த சரீயத்தில் ஒவ்வொரு காலத்திலும் ஏற்படுகின்ற மார்க்க மற்றும் உலகப் பிரச்சனைகளுக்கான தீர்வும் இருக்கின்றது. அந்த இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இந்தக் காலத்தில் இஸ்லாத்திற்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி அதை உயிர்ப்பிப்பதற்காக அனுப்பியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு தடைகள் முன்னால் தென்படும் போது, அத்தகைய நிலையில் உங்களது அறிவு தீர்ப்பு வழங்க முடியாமல் இருக்கும் போது அந்த சமயத்தில் நீங்கள் பொறுமையுடனும், தொழுகையுடனும் அல்லாஹ்விடம் உதவியைக் கேளுங்கள்.

தூய உள்ளத்துடன் அல்லாஹ்விடம் உதவி கேட்டால் வெளிப்படையாகப் பார்க்கும் போது கடினமாகத் தென்படும் விசயங்கள் கூட எளிதானதாக ஆகிவிடும். இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். அவனது மார்க்கமே வெற்றி பெறும். ஆனால் நீங்கள் அந்த வெற்றியில் பங்கு பெறுபவர்களாக ஆவதற்கு பொறுமை மற்றும் தொழுகை அவசியமானதாகும். ஆனால் எப்படிப்பட்ட பொறுமை மற்றும் எப்படிப்பட்ட தொழுகை தேவைப்படுகிறது? அதற்கான முதலாவது வழிமுறை கூறப்பட்டு விட்டது. அது அல்லாஹ்வுடன் ஒன்றியவாறு முயற்சி செய்வதாகும்.

ஸபர் என்பதற்கு அகராதியில் பல்வேறு பொருள்கள் உள்ளன. உதாரணமாக, **ஸபர் என்பதற்கு நிரந்தரமான மனப்பாங்குடன் முயற்சி செய்தவாறு தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பது என்பதாகும்.** ஒரு மூஃமினுக்கு ஓர் அஹ்மதிக்கு இது மிகப்பெரும் பொறுப்பாகும். இந்த பௌதீகம் மிகைத்திருக்கும் இக்காலக்கட்டத்தில் எல்லா புறமிருந்தும் சய்த்தானிய தாக்குதல்கள் நடந்து கொண்டிருக்கும் போது, தீமைகள் ஒவ்வொரு மூலையிலும் தனது வாயைத் திறந்து கொண்டு நிற்கும் போது இந்த தீமைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஜிஹாது செய்ய வேண்டும். தனது நஃப்ஸை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

பிறகு, **ஸபர் என்பதன் பொருள் நன்மைகளில் உறுதியாக நிலைத்திருப்பதாகும்.** அது தற்காலிக நன்மையாக இருக்கக் கூடாது. உலகப் பேராசைகள் மற்றும் தீமை செய்வதில் விருப்பம் ஆகியவை வரும் போது நன்மை செய்வதை மறந்து விடும் நிலை ஏற்படக் கூடாது. பொருத்தமான நற்செயல்களைச் செய்வதன் பக்கம் எப்போதும் கவனம் இருந்து வர வேண்டும். இந்த பொருத்தமான நற்செயல்களை திருக்குர்ஆனிலிருந்து நாம் தேடுவது அவசியமானதாகும்.

பிறகு, **ஸபர் என்பதன் பொருள் எல்லா நிலையிலும் தமது விவகாரங்களை இறைவனுக்கு முன்னால் எடுத்து வைப்பதாகும்.** எந்தவொரு விசயத்திலும் மிகுந்த கவலையுடன் ஓலமிடுவது, கூச்சல் போடுவது இருக்கக்கூடாது. ஒவ்வொரு துன்பத்தின் போதும் கவலை ஏற்படும் போதும் இறைவன் முன்னால் தனது பிரச்சனையை எடுத்து வைக்க வேண்டும். எனவே பொறுமையின் இந்த நிலை இருந்தால் அல்லாஹ்வின் உதவி நம்முடன் இருக்கும். ஆன்மீகத் தகுதிகளில் முன்னேற்றம் ஏற்படும். உலகிலுள்ள கோடிக்கணக்கான செல்வர்களுக்கு எதிரில் ஒரு மூஃமினிடம் உள்ள ஒரு பவுண்டு, ஒரு டாலர், ஒரு ரூபாய் எத்தகைய அற்புதங்களைச் செய்து காட்டும் என்றால் அது உலகை வியப்பில் ஆழ்த்தி விடும்.

தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பது, நன்மைகளில் தொடர்ந்து உறுதியாக நிலைத்திருப்பது, தமது விவகாரங்களை எல்லா நிலையிலும் இறைவன் முன்னால் எடுத்து வைப்பது என்பதே ஸபர் என்பதன் கருத்தாகும். அத்தகைய பொறுமையை மேற்கொள்வதுடன் ஸலாத்தும் அவசியமானதாகும் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஸலாத் என்பதற்கு பல்வேறு பொருள்கள் உள்ளன. **ஸலாத் என்பதன் ஒரு பொருள் தொழுகையாகும்.** இங்கு கூறப்பட்டுள்ள போதனை என்னவென்றால், நம்பிக்கையாளர்கள் தொழுகையின் மூலமாக அல்லாஹ்வின் உதவியைப் பெற வேண்டும். தொழுகைக்கான உரிமையைச் செலுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பொறுமையின் உயர்வான நல்விளைவுகள் தொழுகையின் பக்கம் கவனம் ஏற்படும் போதுதான் வெளிப்படும்.

பிறகு **இதற்கு இன்னொரு பொருள் அல்லாஹ்வின் கருணையைப் பெறுவதாகும். இஸ்திக்ஃபார் செய்வதாகும்.** ஸலாத் என்ற சொல்லில் இந்த எல்லா பொருள்களும் வந்து விடுகின்றது. இது வெளிப்படையான தொழுகை மட்டுமல்ல. மாறாக துஆக்களின் பக்கம் அதற்குரிய உரிமையைச் செலுத்தியவாறு கவனம் செலுத்த வேண்டும். இறைவனது படைப்பினங்கள் மீது கருணை காட்ட வேண்டும். அவர்களுக்குரிய உரிமையைச் செலுத்துங்கள். அதன் மூலம் அல்லாஹ்வின் உதவி கிடைக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் ஓதுங்கள். அதன் மூலமாக அல்லாஹ்வின் உதவி கிடைக்க வேண்டும்.

இத்தகைய விரிவான நிலை ஸபரிலும், ஸலாத்திலும் உருவாகும் போது அல்லாஹ்வின் உதவியும் கிடைக்கும். எல்லா பணிகளும் எளிதாக நடைபெறும். அவ்வாறு எல்லா பணிகளும் நிறைவேறிக் கொண்டே செல்லும். அல்லாஹ்வின் அருள் மற்றும் கருணையின் கதவுகள் திறக்கும். இதுவே ஒரு மூஃமினின் பணியாகும். அவர் தனது முயற்சிகள், தனது இறைவணக்கங்கள், தனது துஆக்கள், தனது நல்லொழுக்கம் ஆகியவற்றை அதன் இறுதி எல்லை வரை கொண்டு செல்ல வேண்டும். உங்களது சக்திக்கு இயன்றவற்றை நீங்கள் செய்து விட வேண்டும். பிறகு உங்கள் விவகாரங்களை இறைவனிடம் விட்டு விடுங்கள். ஆனால் பொறுமைக்குரிய உரிமையை நீங்கள் செலுத்தாமலும் தொழுகைக்குரிய

உரிமையை நீங்கள் செலுத்தாமலும் இருந்தால் பிறகு நிச்சயமாக இறைவனது அருட்கொடைகளில் பங்கு பெறுபவர்களாக நீங்கள் ஆக முடியாது. நான் ஏற்கனவே கூறியது போன்றே ஸபர் என்பதன் ஒரு பொருள் தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பதாகும். இதற்கு தவ்பா செய்வது மற்றும் இஸ்திக்ஃபார் செய்வது அவசியமானதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இந்த மூன்று விசயங்களைக் கருத்தில் கொள்ளும் போதுதான் உண்மையான முறையில் தவ்பா செய்ய முடியும். **முதலாவது விசயம்** உள்ளத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்குரிய வழியாக இருக்கின்ற அத்தகைய எல்லா எண்ணங்களையும் கற்பனைகளையும் உள்ளத்திலிருந்து வெளியேற்றி விட வேண்டும். தவறான செயல்களின் பக்கம் தூண்டக்கூடிய எண்ணங்களை உள்ளத்திலிருந்து வெளியேற்றி விட வேண்டும். எந்த தீமை உள்ளத்தில் இருந்தாலும் அல்லது எத்தகைய தீய எண்ணம் ஏற்பட்டாலும் உள்ளம் அவற்றை வெறுக்கின்ற நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அவற்றில் உங்களுக்கு வெறுப்பு ஏற்பட வேண்டும்.

**இரண்டாவது விசயம்**, தான் செய்த தீமைக்காக வெட்கப்பட வேண்டும். உங்களது உள்ளத்தில் அதனை எத்தனை முறை தீமை என்று கூற வேண்டும் என்றால் அதனால் வெட்கம் உருவாக வேண்டும். அதை நீங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

**மூன்றாவது விசயம்**, இந்த தீமையை நான் மீண்டும் செய்ய மாட்டேன் என்ற மாற்றமில்லாத உறுதியான எண்ணம் இருக்க வேண்டும். ஸபர் என்பதில் இத்தகைய நிலை தான் உருவாகின்றது. அப்போது தான் அது உண்மையான பொறுமை என்று கூறப்படும்.

நாம் நம்மிடம் இத்தகைய நிலையை உருவாக்கி நமது ஸபரிலும் ஸலாத்திலும் இத்தகைய உயர்வான தரத்தை அடைய முழுமையாக முயற்சி செய்தால் பிறகு வழக்கத்திற்கு மாற்றமாக இருக்கின்ற அல்லாஹ்வின் உதவிகள் கிடைக்கின்ற அடையாளங்கள் வெளிப்படும் இன்சா அல்லாஹ்.

அல்லாஹ், அந்த அடையாளங்கள் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வாக்களித்துள்ளான். அவற்றை நாமும் பார்ப்போம். நாம் தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு முயற்சி செய்யாமலும், நன்மைகளில் முன்னேறாமலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பிரச்சாரத்தின் ஆன்மாவைப் புரியாதவர் –களாகவும், நமது ஒவ்வொரு பிரச்சனையின்போதும் இறைவன் பக்கம் திரும்பாமலும், படைப்பினங்களுக்குரிய உரிமையைச் செலுத்தாமலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்தாமலும், *(அதன் பரக்கத்தால் நாம் இறைவனுடைய நெருக்கத்தைப் பெறுபவர்களாக ஆகிவிடுவோம்.)* அதன் பக்கம் கவனம் செலுத்தாமலும் நாம் இருந்து, பிறகு உலகை இஸ்லாத்தின் கொடியின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பை வைத்திருப்பவர்களாக நாம் இருக்க முடியாது. முதலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கத்தை நாம் நிறைவு செய்ய வேண்டும். அப்போது உலகம் இஸ்லாத்தின் கொடியின் கீழ் வரும்; நிச்சயமாக வரும் இன்சா அல்லாஹ்.

ஆனால் செலுத்த வேண்டிய உரிமையைச் செலுத்தாமல் இருந்தால் பொறுமையையும், தொழுகையையும் அதன் இறுதி எல்லை வரை கொண்டு செல்லாமல் இருந்தால், பிறகு நாம் அந்த வெற்றியில் பங்கு பெறுகின்றவர்களாக ஆக முடியாது. எனவே இந்த உரிமையைச் செலுத்த நாம் முயற்சி செய்ய வேண்டும். ஒருநாள் நாம் உலகை வெற்றி கொள்வோம் என்பதைத்தான் நாம் உலகிற்குக் கூறுகின்றோம். இந்த சுற்றுப் பயணத்தின் போதும் நியூசிலாந்தில் ஒரு பத்திரிகையாளர் என்னிடம், நீங்கள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கின்றீர்கள். பிறகு உங்களுக்கு பள்ளிவாசலுக்கான தேவை ஏன் இருக்கின்றது? என்று கேட்டார். மேலும் முதலில் ஏற்கனவே ஒரு ஹால் இருக்கும் போது இதன் தேவை ஏன் இருக்கின்றது? என்று கேட்டார். நான் அவரிடம், இன்று நாங்கள் குறைவான எண்ணிக்கையில் இருக்கின்றோம். திருக்குர்ஆன் மூலம் எங்களுக்கு கிடைத்துள்ள இந்த போதனைகள் மூலமாக ஒருநாள் நாங்கள் பெரும்பான்மையினராக ஆகி விடுவோம் இன்சா அல்லாஹ். அப்போது ஒன்று என்ன? பல பள்ளிவாசல்களின் தேவை நமக்கு ஏற்படும் என்று கூறினேன்.

எனவே இதற்காக உலகில் ஒவ்வொரு இடத்திலும் முயற்சி செய்வதும் நமது நிலைமைகளைக் கண்காணித்து வருவதும் அவசியமானதாகும். ஆனால் இங்கு நான் வேதனையுடன் கூறிக் கொள்கின்றேன். தொழுகையின் பக்கமும், இறைவணக்கங்களின் பக்கமும், அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்துவதன் பக்கமும் எந்த அளவு கவனம் செலுத்தப்பட வேண்டுமோ அந்த அளவு நாம் கவனம் செலுத்தாமல் இருக்கின்றோம்.

நேற்று அல்லது அதற்கு முந்தைய நாளில் ஒரு பெண் என்னைச் சந்திப்பதற்காக வந்த சமயத்தில் மிகவும் அழுதவாறு அவர் என்னிடம் நீங்கள் பள்ளிவாசல்களைக் கட்டுங்கள். பள்ளிவாசல்களை நிரப்புங்கள். பள்ளிவாசல்களின் பொலிவை மேலும் அதிகமாக்குங்கள். ஸலாத்திற்குரிய உரிமையைச் செலுத்துங்கள் என்றெல்லாம் கூறுகின்றீர்கள். ஆனால் நீங்கள் இங்கிருந்து சென்ற பிறகு பள்ளிவாசலில் மக்கள் வருவது மிகவும் குறைந்து விட்டது. அந்தப் பெண் ஃபஸ்ல் பள்ளிவாசல் தொடர்பாக கூறியுள்ளார். தூரத்திலிருந்து வருபவர்கள் நான் இங்கு இருப்பதால் வருகின்றனர் என்றால் அது வேறு விசயமாகும். தூரத்திலிருந்து வரக்கூடிய இவர்கள் இங்கு வரவில்லையென்றாலும் தங்களது சென்டர்களிலும் பள்ளிவாசல்களிலும் தொழுகைகளை ஜமாஅத்தாக தொழக்கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். இவ்வாறு தூரத்திலிருந்து வருபவர்கள் இவ்வாறு தொழுது வருவர் என்று நான் நம்புகின்றேன்.

ஆனால் வருகையில் ஏற்பட்டுள்ள இந்தக் குறைவு பள்ளிவாசலுக்கு அருகில் இருப்பவர்கள் வராததன் காரணமாக ஏற்பட்டுள்ளதென்றால் இது மிகவும் கவலைக்குரிய விசயமாகும். இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறே ஆஸ்திரேலியாவின் எனது சுற்றுப் பயணம் முடிந்த பிறகு அங்கிருந்து ஒருவர் எனக்கு எழுதிய கடிதத்தில் அங்கு பள்ளிவாசலுக்கு வருகை தருபவர்களது எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது என்று எழுதியுள்ளார்.

எனவே ஆஸ்திரேலியாவில் இருந்தாலும் சரி, யூ.கே.வில் இருந்தாலும் சரி, உலகிலுள்ள வேறு எந்தவொரு நாடாக இருந்தாலும் சரி நன்றாக நினைவில் கொள்ளுங்கள். புரட்சியைக் கொண்டு வரவேண்டும் என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பிரச்சாரத்தை நிறைவு செய்வதற்கான நம்மீதுள்ள அந்தப் பொறுப்பை நாம் நிறைவேற்ற வேண்டுமென்றால், பைஅத்திற்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும் என்றால், பள்ளிவாசல்களில் ஏற்படுகின்ற இந்த பொலிவுகளை தற்காலிகமாக ஏற்படுத்தாமல் நிரந்தரமாக அவற்றை நிலைநாட்ட வேண்டும். உங்களது எல்லா நிலைமைகளிலும் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். உங்களது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்த வேண்டும்.

ஸபர் மற்றும் ஸலாத்தின் உரிமை செலுத்தப்படும் போதுதான் அடையாளம் வெளிப்படும். நமது நஃப்ஸை முழுமையான முறையில் அல்லாஹ்வின் வழியில் மாய்த்துக் கொள்ளும் போதுதான் இது நடக்கும். ஏகத்துவத்தில் நிலைத்து நிற்பதற்கான உரிமையைச் செலுத்தும் போது தான் இது நடக்கும். இவை நடந்தால் إِنَّ اللّٰهَ مَعَ الصّٰبِرِيْنَ அதாவது ***பொறுமையாளர்களுடன் அல்லாஹ் இருக்கின்றான் (2:154)*** என்ற காட்சியையும் நாம் பார்ப்போம். அல்லாஹ் தானே உதவி செய்வதற்காக இறங்கி வருவான். அல்லாஹ் தனது முழுமையான ஆற்றலுடனும் அழகிய தோற்றத்துடனும் நமக்கு உதவி செய்ய வருவான். உலகவாதிகள் உள்ள நாடுகளையும், உலகில் சக்தி படைத்த நாடுகளிலுள்ள பொதுமக்களின் உள்ளங்களையும் அல்லாஹ் நம் பக்கம் திருப்பி விடுவான். நமது பணிகளில் பரக்கத் ஏற்படும். மேலும் உலகம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உயர் தகுதியைப் புரிந்து அவர்களது கொடியின் கீழ் வந்து விடும். ஏகத்துவம் நிலைநாட்டப்படும். அல்லாஹ்வை மறுக்கக் கூடியவர்கள் அல்லாஹ்வை வணங்குவதன் பக்கம் கவனம் செலுத்துவர். நமது நமது உரிமைகளைச் செலுத்தியவாறு இந்த காட்சிகளைக் காண்கின்றவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக!

ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு நான் ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். இது அமெரிக்காவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய டாக்டர் பஷீருத்தீன் உஸாமா சாஹிப் உடையதாகும். இவர் நவம்பர் மாதம் 2ம் தேதி தமது 82வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர்கள் 1955 ஆம் ஆண்டில் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆரம்ப ஆப்பிரிக்க-அமெரிக்கன் அஹ்மதிகளில் ஒருவராக இவர் இருந்தார். தொழுகைகளை முறையாகப் பேணுபவராகவும், ஜமாஅத்தின் மீது மிகுந்த பற்றுள்ளவராகவும் அவர்கள் இருந்தார்கள். ஜமாஅத்திற்காக தன்மான உணர்வு உள்ளவர்களாகவும், கிலாஃபத்திற்காக தன்னை அர்ப்பணிப்பவராகவும், துஆ செய்பவராகவும் அவர்கள் இருந்தார்கள். இவர்கள் மிகுந்த உணர்வுப்பெருக்கு உள்ளவராக இருந்தாலும் மிகவும் பணிவுள்ள மனிதராக இவர் இருந்தார். இவருக்கு ரப்வா செல்வதற்கும், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களைச் சந்திப்பதற்கான நற்பேறும் கிடைத்தது. இவ்வாறே ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடனும் ஒருமுறை இவர்களுக்கு சந்திப்பு நிகழ்ந்துள்ளது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களையும் இவர்கள் பலமுறை சந்தித்துள்ளார்கள். அவர்கள் மீது இவர்களுக்கு மிகுந்த நேசம் இருந்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹிற்கும் இவருடன் குறிப்பான தொடர்பிருந்தது. இவர்கள் தமது மனைவியுடன் பைத்துல்லாஹ்வை ஹஜ் செய்வதற்கான நல்வாய்ப்பையும் பெற்றார்கள். கடந்த 20 வருடங்களாக Cleveland -ல் ஜமாஅத்தின் துணைத் தலைவராக இவர்கள் தொண்டாற்றி இருக்கின்றார்கள். பொதுத்தொண்டுகளை மிகுந்த உணர்வுடன் இவர்கள் செய்து வந்தார்கள். குறிப்பாக தமது ஆப்பிரிக்க-அமெரிக்கன் சகோதரர்களை அவர்கள் மிகவும்

கவனித்து வந்தார்கள். இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாகவும் ஒரு சிறு நூலை எழுதுவதற்கான நல்வாய்ப்பைப் பெற்றார்கள். இவர்களது தொழிலைப் பொருத்தவரையில் இவர் Dentist ஆக இருந்து வந்தார்கள். இவரது மனைவியான மதிப்பிற்குரிய ஃபாத்திமா உஸாமா சாஹிபா அவர்களும் நீண்ட காலமாக Cleveland –ல் லஜ்னா தலைவியாக இருந்துள்ளார்கள். இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். ஒருவர் முகீத் உஸாமா. இவரது வயது 54. இன்னொரு மகன் ஸஃபருல்லாஹ் உஸாமா ஆவார்கள். இவர்கள் இருவருக்கும் ஜமாஅத்துடன் ஆழமான தொடர்பு இருக்கின்றது. அல்லாஹ் இவரது தகுதிகளை உயர்த்துவானாக! அல்லாஹ் இவர்களது பிள்ளைகளை எப்போதும் ஜமாஅத்துடன் தொடர்புள்ளவர்களாக ஆக்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRAT KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH Mosque, London.
on **22.11.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD Sb.
Typeset by : A. MUHAMMAD NISAR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456